


ஸ்டாலின் தமிழ்நாட்டின் வழிகாட்டி! இந்தியாவின் திசைகாட்டி!! எனும் தலைப்பில் சென்னை தெற்கு மாவட்ட முரசொலி வாசகர் வட்டத்தின் சார்பில் மூன்றாவது கருத்தரங்கம் மாவட்ட கழக கலைஞர் அரங்கத்தில் மாவட்ட அமைப்பாளர் தடா ஒ. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தி.செந்தில்வேல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் எஸ். அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ., வாசுகி பாண்டியன், பகுதிச் செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, நொளம்பூர் வே.ராஜன் மற்றும் களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எம்.பிரகாஷ் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மணிகண்டன் நாடிமுத்து, நிஷா சையத், பகுதி இளைஞரணி நிர்வாகிகள் வாசர் வட்ட நிர்வாகிகள் பங்கேற்றநனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## புதிய நிர்வாகிகளுக்கான 2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





# நமது முன்னோர் சுமேரியத் தமிழர்!

தேனீக்கள் மேன்மை மிக்க உயிரினம் அவை சமுதாய உணர்வு உடையவை. இடம் பெயர்ந்து வேறு இடத்தில் கூடு கட்டும் தன்மை கொண்டவை பழந்தமிழரும் மேன்மை மிக்க மாந்தரினம். இவர்கள் சமுதாய உணர்வுடன் வாழ்ந்தவர்கள் தமிழ் மண்ணை விட்டு வெளியேறித் தொலைதூர அயலிடங்களில் குடியேறி நிலைத்து நின்றவர்கள், தமிழகத்தைக் கடல்கோள் விழுங்கிய காலக் கட்டத்தில் பல தமிழ்க் குடும்பங்கள் நாவாய்களில் மாபெரும் கப்பல்களில் ஏறி, நெடுந்தூர நாடுகளில் குடியேறினர் என்று அறிஞர் ஆபிரகேம் பண்டிதர் அறிவித்தார், அந்த ஆழிப்பேரலை வருவதற்கு முன்பே தமிழரின் புலம் பெயர்தல் நடைபெற்றது.

காற்றுக்கு அடுத்தபடியாக மனிதருக்கு நீர் மிக மிக முக்கியமானது. எனவே தான் முன்பு ஆற்றின் கரைகளில் மாந்தரின் ஊர்கள் அமைந்தன. ஐரோப்பாவை ஒட்டிய கீழ்ப்பாகத்தில் யூப்ரெடிஸ், டைகிரஸ் என்ற ஆறுகள் ஓடின, ஓடுகின்றன. இவற்றின் இடைப்பட்ட நிலப்பரப்பில் மனிதரின் குடியேற்றம் நெடுங்காலத்திற்கு முன்பு நடந்தது. இந்த நிலப் பகுதி மெசப்பட்டோமியா என்று அன்று சொல்லப்பட்டது, ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு ஓர் இனத்தவரின் குடியேற்றம் நடந்தது. அந்த இனத்தவருக்குச் சுமேரியர் என்ற பெயரை, ஃபிரெஞ்சு அறிஞர் ஜூல்ஸ் ஒப்பெர்ட் தந்தார் என்சைக்குளோபபீடியா அமெரிக்கானா (தொ.26 பா) சுமேரு என்றால் பயணத்தை நிறுத்தும் இடம் என்று பொருள், நெடும் பயணம் மேற்கொண்ட மக்கள் தங்கள் பயணத்தை நிறுத்திக் கொண்டு, புது வாழ்வைத் தொடங்கிய நிலையைச் சுமேரு என்ற சொல் உணர்த்துகிறது.

சுமேரியர் பற்றிய தொன்மைக் கதை உள்ளது. ஓயன்னஸ் என்பவன் பாரசீக வளைகுடாவை நீந்திக் கரை ஏறிச் சுமேரியாவுக்கு வந்தான். அவன் நாகரிகத்தையும் கலைகளையும் பரப்பினான். இச் செய்தியைப் பெரோசஸ் என்ற குரு குறிப்பிட்டார், என்பதே அந்தக் கதை இதை வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரும் கூறியுள்ளார் (தமிழரின் தோற்றமும் பரவலும்.ப.52). சுமேரியாவில் நாகரிகத்தைப் பரப்பிய மற்றொருவரையும் பெரோசஸ் அறிவித்துள்ளார். அவருடைய பெயர் ஓடக்கோன் சுமேரியாவில் நாகரிகத்தையும், எழுத்து முறையையும் பரப்பியவர்கள் உவண்ணா, ஓடக்கோன் என்பவர்கள் என்று ஈராஸ் பாதிரியர் கூறினார் (இந்தியன் இஸ்டாரிக்கல் ரெவ்யூ 1936) உவண்ணா, ஓடக்கோன் ஆகியோரின் தலைமையில் தமிழர்கள் சுமேரியாவில் குடியேறினர் என்று, ந.சி. கந்தையாபிள்ளை கூறினார். மேலே கூறப்பட்ட ஓயன்னஸ் என்பது உவண்ணா என்ற சொல்லின் திரிபாகும். துளு மொழியில் உவண்ணா என்றால் மலரின் அண்ணன் என்பது பொருள், ஓடக்கோன் என்றால் கப்பல்களின் தலைவன் என்பது பொருள் (தமிழர் யார் ந.சி. கந்தையா பிள்ளை ப. 35)

### முனைவர் நாரண இராசகோபாலன்
(புலவர், பி.லிட் எம்.ஏ. பி.லிப் எஸ். சி. டிப்ஃபிரஞ்சு பி.எச்டி)



தரை வழியாகவும் கடல் வழியாகவும் சென்று, மெசப்பட்டோமியாவில் குடியேறிய திராவிடரே, சுமேரிய நாகரிகத்தை உரு வாக்கினார்கள் என்று எச். ஆர்.ஆல் அறிவித்தார் என்று, பி.டி.சீனிவாச ஐயங்கார் எடுத்துரைத்தார். (தமிழர் வரலாறு ப. 98) இந்தச் சுமேரியநாகரிகமே உலகப் புகழ் சிறந்த நாகரிகம். இதுவே உலகின் மிகவும் பழைமையான நாகரிகம் இதனை அடுத்து எகிப்து நாகரிகம், மெக்சிகோ நாட்டு மாயன் நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் ஆகியவை போற்றப்படுகின்றன. தற்போது கீழடி நாகரிகம் வெளிப்பட்டுள்ளது. இவையாவும் தமிழினத்துக்கு உரியது என்பது குறிப்பிடத்தக்கது. பெருமைக்கும் உரியது.

சுமேரியர், தமிழ்நாட்டிலிருந்துதான் சென்று மெசபட்டோமியாவில் குடியேறினர் என்பது தெரிகிறது. அவர் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலிருந்து போனார்கள்? சிந்து வெளிப்பகுதியில் கிடைத்த சில சின்னங்கள்

சுமேரியாவில் கிடைத்துள்ளன என்று ஆர். இராகவ ஐயங்கார் கூறினார். சிந்து வெளிநிலப்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகள் சுமேரியரின் நாட்டில் கிடைத்துள்ளன என்று வில்லியம் மக்நீல் எழுதியுள்ளார் (வேர்ல்டு இஸ்டரி உலகவரலாறு) சுமேரியரும் திராவிடரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவரே என்று ஆல் வலியுறுத்திக் கூறியுள்ளார். தெற்கு பாபிலோனியாவில் வாழ்ந்த சுமேரி யருடன் திராவிடருக்குத் தொடர்பிருக்கலாம். என்று ஹாவெல் கருதினார். பஞ்சாபிலிருந்து பாரசீக வளைகுடாவிலுள்ள நிலப்பகுதி முழுதும் சிந்து வெளிநாகரிகம் வாழ்ந்த பகுதி. அங்கிருந்து அந்த நாகரிகம் (ஆதி தமிழரின் நாகரிகம்) மேற்கு நோக்கிச் சென்றது. அது சுமேரியா, பாபிலோன். எகிப்து போன்ற நாடுகளுக்குப் பரவியது என்பது ஈராஸ் பாதிரியாரின் கோட்பாடு, சிந்து வெளி மக்கள் (தொல் தமிழர்) நிலம் வழியாகவும் கடல் வழியாகவும் பாரசீகத்தைத்தாண்டி, யூப்ரடெஸ், டைகிரஸ் ஆற்றுப் பள்ளத்தாக்குக்குப் போய்க் குடியேறினார். (அவர்கள் சுமேரியர் எனப்பட்டனர்). சுமேரியரும் சிந்துவெளி நாகரிக மக்களும் தென்னிந்தியரை (தமிழரை போன்ற இனத்தவர் என்பதை மறுக்க முடியாது என்று வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் உறுதியாக உரைத்தார். (சிந்து வெளி நாகரிகம் அழிவைச் சந்தித்ததும், அங்குத் தப்பிப் பிழைத்த தமிழ் மக்கள், வட மேற்கு நிலப்பகுதியில் குடியேறினர். காலப்போக்கில் அவர்கள் அரேபியரின் ஆட்சியில் அடிமையாயினர், தமிழ்மொழியில் அரபி, பாரசீகமொழி சமஸ்கிருதம் கலந்தன. அவர்கள் மதம் மாற்றப்பட்டனர் அவர்கள் சிந்தி மொழியினர் எனப்பட்டனர். அவர்கள் மற்ற இடங்களிலும் பரவினர் என்பது இங்கு நினைக்கத்தக்கது. (செந்தமிழின் மகள், சிந்திமொழி மலையமான்) அடிப்பாகம் சதுரமாகவும் மேலே போகப்போகக் குறுகிக் கூம்பு வடிவமாகும் முறையில் கட்டப்பட்ட பிரமிடு உலகப் புகழ் பெற்றது. தமிழ்நாட்டில் இராசராச சோழனின் தஞ்சைப் பெரியகோயிலும் அவனுடைய மகன் இராசேந்திர சோழனின் கங்கை கொண்ட சோழபுரக்கோயிலும் பிரமிடு

வடிவக் கட்டடங்களை மெக்சிகோ நாட்டு மாயன் தமிழரின் கோயில்களும் கூம்பு வடிவம் கொண்டவையே. இதே கட்டட வடிவத்தில் சுமேரியாவில் நம்மு என்ற மாமன்னன் கோயில் கட்டினான் அங்கே கடவுள் நிலாவுக்குச் சிலை அமைத்தான் இந்தக் கோயில் கட்டட அமைப்பு முறையும் சுமேரியர் தமிழரே என்பதற்குச் சான்று அளிக்கிறது.

குயவனின் குடம் தயாரிக்கும் சக்கரம் அற்புதமான கருவி சமநிலையில் அமைந்து நீண்ட நேரம் சுழலக் கூடிய அந்தச் சக்கரம் அறிவியலை அடிப்படையாகக் கொண்டது எனலாம். இந்தச் சக்கரம், 4000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சுமேரிய மண்ணிலும் சுழன்றது. இதுவும் சுமேரியர் தமிழர் உறவுக்குச் சான்றாகிறது.

பழந்தமிழர் நகர நாகரிகம் கொண்டவர்கள் சுமேரியாவிலும் நகரங்கள் தோன்றின. அவை இலாகாசு, உம்மா நிப்பூர் என்பன (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 8.பக். 260261) ஊர் என்ற முடிவுடன் கடலூர் என்பதைப் போல் நிப்பூர் என்ற பெயர் அமைந்திருப்பது சிந்தனைக்கு உரியது. அங்கு ஊர் என்ற பெயரிலும் மக்கள் வாழ்விடம் இருந்ததாகத் தெரிகிறது

தொன்மைத் தமிழர்கள் கணிதத் துறை வல்லுநர்கள். பல கோடிகளை உள்ளடக்கிய தாமரை, வெள்ளம், ஆம்பல் முதலிய எண்கள், இங்குப் பயன்பாட்டில் இருந்தன. மிகச் சிறிய எண், (பின்னம்) எது தெரியுமா? அது தேர்த்துக்கள் என்பது. அதற்குரிய எண் 1/2323824530227200000/. மாயன் தமிழரும் கணிதத்துறையில் ஓங்கி இருந்தார்கள். அவர்களைப் போலவே சுமேரியத்தமிழரும் கணிதத் துறையில் சிறந்து விளங்கினார்கள். 10 என்ற எண்ணின் அடிப்படையில் எண்களை வரிவுபடுத்தினார்கள், தமிழரின் 60 நாழிகை என்ற பிரிவைப் போல், இன்றைய ஒரு மணி நேரத்தை 60 பிரிவாகக் கொண்டார்கள். தமிழர்கள் முன்பு மதியின் நிலாவின்] அடிப்படையில் மாதம் என்ற காலப்பிரிவை அமைத்தார்கள் (மதிமாதம்) சுமேரியரும் இதே முறையை மேற்கெண்டிருந்தனர்.

தமிழ் நாட்டில், கற்பகத்தரு எனப்பட்ட பனைமரம் எங்கும் விளைந்தது. பல விதங்களில் பலன் அளித்தது. அதன் நீள ஓலைகள் புத்தகங்களாக (ஓலைச்சுவடிகளாக) உதவின சுமேரியாவில் பனைமரம் இல்லை பதப்படுத்தப்பட்ட மண் பலகைகளே புத்தகங்க ளாக மாறின. இப்படிப்பட்ட களிமண் புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் கிடைத்தன. இவற்றில் இலக்கியப் படைப்புகள், பக்திப் பாடல்கள், பழ மொழிகள் முதலியவை பதிவு செய்யப் பெற்றுள்ளன.

சுமேரியரின் மொழியில் தமிழ்ச் சொற்கள் திரிபு நிலையில் அமைந்துள்ளன. அவர்களின் தாய்த்தெய்வம் இன்னியா எனப்பட்டது. அன்னை என்ற சொல்லே இன்னியா என்றானது! கோயில், கால் என்று திரிந்தது அம்மா அமா, தரை தர, அப்பன் அப், ஆ (பசு) அப், ஏர்ஆர், தாக்கு தாக் என்று தமிழ்ச் சொற்கள் சுமேரியமொழியில் மாறியுள்ளன. என்று ந.சி. கந்தையா பிள்ளை அறிவித்தார் (வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழந்தமிழர்ப.153) பாதை பாட், நாக்கு நாக், ஆறு ஆ என்று தமிழ்ச் சொற்களின் உருமாற்றத்தை எஸ்.நாகராஜன் கூறினார். (அயல் நாடுகளில் தமிழர்ப41)

தமிழகத்து ஔவையார் பெரும் புகழுக்கு உரியவர். அவர் உலகின் முதல் பெண்தூதுவர். சுமேரியாவிலும் ஓர் ஔவையார் வாழ்ந்தார். அவருடைய பெயர் எந்நெடுவானா. இவர், இனாவின் பெரும் புகழ், பேரிதயம் கொண்ட பெருமாட்டி, முதலிய பாடல்களை எழுதினார். இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் என்ற பெருங்காப்பியம் படைத் தார். சுமேரியாவின் காப்பி யம் கில்காமெஷ். இத்தமிழ்க் காப்பியமே உலகின் முதல் காப்பியம் எனலாம். மனிதன் சாகாவரம் பெறு வதற்கு மேற்கொண்ட முயற்சியை இக்காப்பியம் கூறுகிறது. (பெருமைத்தமிழரை மறந்த வரலாறுமலையமான்)

சுமேரியரின் களிமண் பலகை நூல்களில் பழந்தமிழரின் அளவற்ற செய்திகள் அடங்கிக்கிடக்கின்றன. அவற்றைத் தேடி எடுத்து வெளிப்படுத்துவது காலம் இடும் கட்டளை எனலாம்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஆவடி தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் துவங்கப்பட்ட பட்டாபிராம், TIDEL PARK இல், Dexterity மென்பொருள் எனும் புதிய நிறுவனத்தை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார். உடன் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், மாநகர சன் பிரகாஷ், மண்டல தலைவர் அம்மு பொன்விஜயன், பகுதி செயலாளர்கள் பொன்.விஜயன் வழக்கறிஞர் பெ.வினோத், எஸ்.ஒய்.தாஸ், கு சேகர், ஆதிகேசவன், கோபி, சதிஷ், ராஜலிங்கம் மற்றும் நிறுவன அதிகாரிகள் உள்ளனர்.